**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**I.A.No. 78/2013 in O.S. No. 22/2001**
**Deposition of Witness for the Court Witness - CW1**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **செந்தில்குமார்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **பாலசுந்தரம்** | **தொழில்** | இளநிலை உதவியாளர், அரவக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகம் |
| **Village:** | | **Religion:** | |
| **Taluk:** | | **Age :** | 46 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 31.10.2025 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் அரவக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற கடித்தின் பேரில், கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி ஆவணங்களை சமர்பித்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.10.2025 ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் இருந்து அனுப்பபட்ட கடிதத்தின் பேரில், எங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கடந்த 22.10.2025 ம்தேதியன்று ந.க.எண். 174/2025–ல் கடந்த 1996 ம் வருடத்தின் புத்தகம் எண். 1 ஆவண எண். 2080 ற்கான கைரேகை பதிவேடு அசலை தொகுதி எண். 247 யை இந்த நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. நாங்கள் அனுப்பிய கடந்த 22.10.2025 ம் தேதியிட்ட கடிதம் **நீ.ம.த.சா.ஆ.1** ஆகும். எங்கள் அலுவலத்தில் பராமரிக்கப்பட்டு வந்த மேற்படி அசல் கைரேகை பதிவேடு அசல் **நீ.ம.த.சா.ஆ.2** ஆகும். மேற்படி கைரேகை பதிவேட்டுடன் தொடர்புடைய கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகலை அறிக்கையுடன் தாக்கல் செய்கிறேன். அந்த அறிக்கையுடன் கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **நீ.ம.த.சா.ஆ.3**

ஆகும். நான் தாக்கல் செய்த கைரேகை பதிவேட்டில் பக்கம் 43–ல் கருப்புசாமி கவுண்டர் என்பவர் 3வது கைரேகையை இடதுபுறத்தில் பதித்துள்ளார். அந்த இடதுபுறத்தில் உள்ள 3வது கைரேகை **நீ.ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதி வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. )**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.